DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 258/2024** |
| Deposition of Witness for | : | **P.W. 4** |
| Name | : | **கிருஷ்ணமூர்த்தி** |
| Father's Name | : | **சுந்தரம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | **டாஸ்மாக் சூப்பர்வைசர்** |
| Age | : | **51/2026** |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. 2-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 25.06.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது 7751 என்ற டாஸ்மாக் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 7674 என்ற டாஸ்மார்க் நிறுவனம் உள்ள கலியாந்துாரில் மேற்பார்வையாளராக பணியில் இருந்தபோது 06.08.2018 ம் தேதி இரவு 7.45 மணியளவில் நான் கடையில் இருக்கும்போது திருப்புவனம் காவல்நிலைய போலிசார் வந்து எங்களது கடையில் அன்றைய தேதியில் மாலை 4.45 மணிக்கு எதிரிகள் என்பவர் மது வாங்கிவிட்டு பணம் அதிகமாக கொடுத்துவிட்டதாக மலையரசனிடம் பிரச்சினை செய்ததது சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். சம்பவயிடத்திற்கு நான்குமால் வரைந்து நானும் முருகன் என்பவரும் அதற்கு சாட்சி கையொப்பம் செய்தோம்.

WEB COPY

நான் கையொப்பமிட்டு ஆவணத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆகும். பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தன்று கடையில் சூப்பர்வைசராக இருந்தவர் முத்துக்குமார் என்றால் சரிதான். 06.08.2018ம் தேதி சம்பவத்திற்கு பின்பு கடை அடைக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மறுநாள் 12.00 மணியளவில் தான் கடையை திறந்தோம். 06.08.2018ம் தேதி மாலை 7.45 மணிக்கு நான் பணியில் இருந்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் பாட்டில்கள் உடைந்துகிடந்தது சுமார் 10 பாட்டில்கள் உடைக்கப்பட்டு கேட்டில் கிடந்தது. அ.த.சா.ஆ.2 பார்வை மகஜரில் ஆய்வாளர் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். கடை இரண்டு அறைகளாக உள்ளது. ஒரு அறையை மட்டும் கடையாக பயன்படுத்தியது கிடையாது. 06.08.2018ம் தேதி நான் கடைக்கு போகவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் மதுபான கடையில் வேலை செய்வதற்கான ஆவணத்தை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எங்களுக்கு தினமும் வருகை பதிவேடு இருக்கும். தினசரி வேலைக்கு வருபவர்கள் வராதவர்கள் என குறிப்பிடப்பட்டிருக்கும். சம்பவத்தை கேள்விப்பட்டு நான் மருத்துவமனைக்கு சென்றேன். எங்கள் அதிகாரி டாஸ்மாக் கடைக்கு வந்த நேரத்தில் அங்கு சென்றேன். அப்போது சுமார் 6.00 மணி இருக்கும். நானும் முருகன் என்பவரும் டாஸ்மாக் கடைக்கு சென்றோம். நாங்கள் செல்லும்போது அங்கு போலிசார்

WEB COPY

இருந்தார்களா என்றால் இல்லை. எத்தனை போலிசார் வந்தார்கள் என்றால் 4 போலிசார் வந்தார்கள் குறிப்பிட்டு யார் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. போலிசார் அங்கு எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் போலிசார் சுமார் அரை மணி நேரம் இருந்தார்கள். அ.த.சா.ஆ.2 பார்வை மகஜர் யார் எழுதினார்கள் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. பார்வை மகஜரை எழுதியவர் தான் மாதிரி வரைபடத்தையும் தயார் செய்தார். நான் மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு போலிசார் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக காவல்நிலையத்தல் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

/Sd./S.Mohana Ramya,
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY